**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 84/2022**

பெயர் : ரவீந்திரன் (PW1) (Cross )

த/க/பெ. :

தேதி :17.06.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1ம் பிரதிவாதி என் தந்தையின் 2 வது மனைவி. அவரது மகன் 2 வது பிரதிவாதி. என் சொத்தை ஒப்படைக்க கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ. 4 20.05.1963 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். உயில் ஷெரத்துக்களை மறைத்து என் பெயரில் பட்டாவை மாற்றி உள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியிடம் தாவா சொத்துக்களை பராமரிக்க கொடுத்துள்ளதாக சொல்லி உள்ளது தவறு என்றாலும் எக்காலத்திலும் நான் பராமரிப்பிற்காக கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. 2ம் பிரதிவாதி 3 ஆண்டுகளாக எந்த கணக்கும் கொடுக்க வில்லைஎன்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 47 4 பி, 7 பி, 45/8 சொத்தின் சர்வே எண்கள். விஸ்தீரணம் 4 பி - 3 ஏர்ஸ், 7 பி - 2 ஏர்ஸ், 45/8 – 24.5 ஏர்ஸ். 1 மற்றும் 3 வது அயிட்ட சொத்துக்கள் உயில் ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். 3 அயிட்ட சொத்துக்களும் உயில் படி பட்டா வழங்கப்பட்டவை தான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ. 4 உயில் சான்று நகலில் தாவா சொத்து பி ஷெடியூலாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து எனக்கும் என் சகோதரர் விஜயக்குமாருக்கு சேர்த்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் தந்தையுடன் உடன் பிறந்தவர் ராஜலெட்சுமி மட்டும் தான். அவருக்கு உயிலில் சி ஷெடியூல் 29 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் பிராதில் 45/8 ல் 24.50 (59 செண்ட்) ஏர்ஸ் சுவாதீனம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். ராஜ லெட்சுமி தற்போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு கலியமூர்த்தி, சுவாமிநாதன் வாரிசுகள். உயில் சி ஷெடியூலுக்கு ராஜலெட்சுமியின் வாரிசுகள் தான் உரிமையார்கள் என்றால் சரியல்ல. சொத்துக்களை அப்போது எனக்கு விற்று விட்டார்கள். சாட்சி மீண்டும் அவர்கள் விற்க வில்லை பாட்டி எனக்கு எழுதிக் கொடுத்தார் என்று சொல்கிறார். பாட்டி எனக்கு எந்த ஆவணம் எந்த தேதியில் எழுதிக் கொடுத்தார்எ ன்பது எனக்கு நினைவில்லை. நான் அப்போது சிறு வயதாக

இருந்தேன். நான் சொல்வது போல் என் பாட்டி எந்த சொத்தும் எழுதி கொடுக்கவில்லை என்றாலும் 3 வது அயிட்ட வழக்கு சொத்து ராஜ லெட்சுமியின் வாரிசுகள் வசத்தில் தான் உள்ளது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பி ஷெடியூல் உயில் சொத்து எனக்கும் என் தம்பி விஜயகுமாருக்கும் பாகம் ஏற்படவில்லை என்றால் சரிதான். அவர் உரிமையை எனக்கு வாய் மொழியாக கொடுத்துவிட்டார். அவ்வாறு சொல்வது பொய் என்றாலும் எந்த ஏற்பாடும் நடக்கவில்லைஎன்றாலும் சரியல்ல. இன்று வரை பி ஷெடியூல் சொத்துக்கள் எனக்கும் விஜயக்குமார் வாரிசுகளுக்கு கூட்டு அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. 45/4 ஏ குமாரசாமிக்கு பாத்திய பட்ட இடத்தில் தான் 2 ம் பிரதிவாதி 600 அடி ஷெட் போட்டுள்ளார் என்றால் சரியல்ல. அந்த இடமும் என்னை சேர்ந்தது தான். 45/4 ஏ எனக்கு பாத்தியப்ட்டது அல்ல குமாரசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 45/4 ஏ எனக்கு பாத்தியம் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. வாய் மொழியாக கொடுத்ததுதான். நான் கேட்டுள்ள செயலுறுத்து பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்றாலும் மேற்படி ஷெட் குமாரசாமி இடத்தில் உள்ளது என்றாலும் சரியல்ல. வழக்கில் குறிப்பிட்டுள்ள ஷெட் என் இடடத்தில் தான் உள்ளது என்பதற்கு சர்வேயர் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு உரிமையான இடம் என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை. நான் கேட்டுள்ள பரிகாரத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதால் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்ககூடியயுது அல்ல என்றால் சரியல்ல. சர்வேயர் மூலம் அளந்தால் தான் ஷெட் உள்ள இடம் தெரியவரும் என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.